**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXIII, Cr.P.C.)**

## IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, KANGEYAM

| | | |
|---|---|---|
| Case No. | : | STC – 137/2024 |
| Deposition of Witness | : | PW– 1 |
| Name | : | அனுசியா தேவி |
| Father Name | : | தாமரைக்கண்ணன் |
| Village | : | வெள்ளகோவில் |
| Taluk | : | காங்கேயம் |
| Age | : | 47 |

Accused Present.

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of 20.11.2025

**எதிரியை அடையாளம் காட்டுவதற்காக அரசு தரப்பில் அ.சா.1 மீண்டும் அழைக்கப்பட்டு முதல் விசாரணை தொடர்ச்சி**

கடந்த 10.08.2023 ஆம் தேதியன்று மாலை 4.30 மணியளவில் பள்ளிக்கு சென்று எனக்கு சொந்தமான இருசக்கர வாகனத்தில் எனது மகன் மற்றும் மகள் ஆகியோரை பின்னால் அமர வைத்துக்கொண்டு பள்ளியில் இருந்து வீட்டிற்கு செல்வதற்காக வலது புறமாக திருச்சி – காங்கேயம் ரோட்டிற்கு திரும்பி கிழபுறமாக செல்லும்போது எங்களுக்கு பின்னால் வந்த கோவை – திருச்சி செல்லும் ஏசி பேருந்தை ஆஜர் எதிரி வேகமாக ஓட்டி வந்து எங்களுக்கு பின்னால் வந்து எங்கள் வாகனத்தின் மீது மோதி விபத்து ஏற்பட்டது. போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**குறுக்கு விசாரணை**

விபத்து நடந்த சாலை கோவை – திருச்சி செல்லும் தேசிய நெடுஞ்சாலை என்றால் சரிதான். மேற்படி சாலையானது கிழமேல் தார் சாலை என்றால் சரிதான். சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் இடத்திற்கு வடபுறமாக பாலா மெட்ரிக் பள்ளி உள்ளது என்றால் சரிதான். சம்பவம் நடந்த இடத்திற்கு மேற்கு புறமாக பேரிகார்டு உள்ளது என்றால் சரிதான். சம்பவம் நடந்த இடத்திற்கு மேற்கு புறமாக வேகத்தடையும் உள்ளது என்றால் சரிதான். கிழமேல் தார் சாலைக்கு வடபுறமாக செல்லும் சாலையில்தான் பாலா பள்ளி உள்ளது என்றால் சரிதான். பாலா பள்ளியில் இருந்து தெற்கு நோக்கி வந்து மெயின்ரோட்டை அடைவதற்கு கிழக்கு நோக்கி

திரும்பவேண்டும் என்றால் சரிதான். சம்பவ சமயத்தில் நானும், எனது குழந்தைகளும் வடக்கில் இருந்து தெற்கு நோக்கி வந்து கிழபுறமாக திரும்பும்போது விபத்து நடைபெற்றது என்றால் சரிதான். இந்த விபத்தில் எனது இருசக்கர வாகனத்தின் முகப்பு விளக்கு, சைடு மிரர், சைலன்ஸ்சர் கார்டு சேதாரம் அடைந்துவிட்டது என்றால் சரிதான். எனது இருசக்கர வாகனத்தின் பின் பகுதியில் எந்த சேதாரமும் இல்லை என்றால் சரிதான். விபத்தானது தார் சாலையின் மையப்பகுதியில் நடந்தது என்றால் சரிதான். நான்தான் எனது இருகுழந்தைகளையும் வைத்துக்கொண்டு வடக்கில் இருந்து தெற்கு நோக்கி வந்து கிழமேல் தார்சாலையில் மேற்கில் இருந்து வரும் வாகனத்தை கவனிக்காமல் திடீரென திரும்பி சாலையின் மையப்பகுதிக்கு சென்று வழிய விபத்தை ஏற்படுத்திக்கொண்டேன் என்றால் சரியல்ல. வாகன விபத்து நஷ்ட ஈடு பெறவேண்டி பொய்யான புகார் கொடுத்து அதற்கு ஆதரவாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எதிரிக்கும் இவ்வழக்கிற்கும் சம்பந்தம் இல்லை என்றால் சரியல்ல.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் திறந்த நீதிமன்றத்தில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காண்பிக்கப்பட்டு சாட்சியால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

D THENMOZHI
Digitally signed by D THENMOZHI
Date: 2025.11.20 19:09:00 +0530

குற்றவியல் நீதித்துறை நடுவர்,
காங்கேயம்

**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXIII, Cr.P.C.)**

## IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, KANGEYAM

| | | |
|---|---|---|
| Case No. | : | STC – 137/2024 |
| Deposition of Witness | : | PW- 2 |
| Name | : | மோகன் |
| Father Name | : | மணி |
| Village | : | காங்கேயம் |
| Taluk | : | காங்கேயம் |
| Age | : | 25 |

Accused present.

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of 20.11.2025

**முதல் விசாரணை**

நான் தற்போது காங்கேயத்தில் குடியிருந்து வருகிறேன். கோவை – திருச்சி ரோட்டில் அய்யாவு பைப் கம்பனி அருகில் மாலை சுமார் 4.30 மணியளவில் போலீசார் விபத்து நடந்த சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்தார்கள். அதில் சாட்சியாக இருக்கும்படி கேட்டார்கள். அதில் நானும் என்னுடன் முருகேஷன் என்பவரும் சாட்சியாக கையொப்பம் செய்தோம். தற்போது என்னிடம் காட்டப்படும் பார்வை மகஜரில் உள்ள முதலாவது கையொப்பம் என்னுடையதுதான். **அந்த பார்வை மகஜர் அ.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது**. போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**குறுக்கு விசாரணை**

விபத்தில் அடிபட்ட நபர் எனக்கு பழக்கமான நபர் என்பதால் காவல் நிலையத்தில் வைத்து கையொப்பம் செய்துவிட்டு தற்போது சம்பவ இடத்தில் வைத்து கையொப்பம் செய்ததாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் திறந்த நீதிமன்றத்தில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காண்பிக்கப்பட்டு சாட்சியால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

D THENMOZHI

Digitally signed by D THENMOZHI
Date: 2025.11.20 19:09:09 +0530

குற்றவியல் நீதித்துறை நடுவர்,
காங்கேயம்